# முதல்வர் மு.க. ஸ்டாலின் தமிழ்நாட்டின் வழிகாட்டி; இந்தியாவின் திசைகாட்டி!



வரலாற்றுச் சிறப்பு மிக்க அறிவிப்பு ஒன்றை நேற்று சட்டப்பேரவையில் அறிவித்துள்ளார் நம் திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். மாநிலங்களின் உரிமைகள் பாசிச பா.ஜ.க. வால் தொடர்ந்து பறிக்கப்பட்டுவரும் நிலையில், மாநில சுயாட்சியை ஒரு போதும் தி.மு. கழகம் கைவிடாது என்பதை உரக்கச் சொல்லும் விதமாக மாநில சுயாட்சி குறித்து ஆய்வு செய்ய ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் ஒரு குழுவை அமைத்து உத்தரவிட்டுள்ளார் நம் முதலமைச்சர்.

ஆளுநர்களின் அதிகார மமதைக்கு உச்ச நீதிமன்றத்தின் மூலம் நம் முதலமைச்சர் சவீ பத்தில் வைத்த குட்டின் வலியில் இருந்து பாசிச சக்திகள் மீளும் முன்பாகவே அடுத்த இடியை அவர்கள் தலையில் இறக்கியுள்ளார் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். முத்தமிழ் அறிஞர் கலைஞர் முதலமைச்சராக பதவி ஏற்றதும் மாநில சுயாட்சி குறித்தும், ஒன்றிய- மாநில அரசின் உறவுகள் குறித்தும் ஆய்வு செய்ய அன்றைய உயர் நீதிமன்ற நீதிபதி ராஜமன்னார் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டியை அமைத்தார். அக்கமிட்டியின் அறிக்கை அன்று பல்வேறு மாநிலங்களிலும் மாநில சுயாட்சி குறித்த விவாதங்களை ஏற்படுத்தியது.

அந்த வகையில் இன்று இந்தியா முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு ஜனநாயக நெருக்கடிக்கு ஆளாகி வரும் சூழலில் சட்டப் பேரவையில் நம் முதலமைச்சர் அறிவித்துள்ள இந்த அறிவிப்பானது தமிழ்நாட்டிற்கு வழிகாட்டுவதாய் மட்டுமின்றி இந்தியாவிற்கே திசைகாட்டுவதாகவும் அமைந்துள்ளது.

இன்று மட்டுமல்ல என்றுமே தமிழ்நாட்டிற்கு வழிகாட்டியதும், இந்தியாவிற்கு திசை காட்டியதும் தி.மு. கழகம்தான் என்றால் அது மிகையல்ல. இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க தருணத்தில் நம் திராவிட மாடல் நாயகரின் திசைகாட்டும் திட்டங்களை திரும்பிப் பார்ப்பது நம் அனைவரின் கடமை என்றே நினைக்கிறேன். அக்கடமையின் ஒரு பகுதியே இக்கட்டுரை.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தைத் தந்த கலைஞர் வழியில், இந்த திராவிட மாடல் ஆட்சியில் 1லட்சத்து 80 ஆயிரம் புதிய இலவச மின் இணைப்புகளை விவசாயிகளுக்குத் தந்தவர் நம் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்..

சத்துணவை சத்தான உணவாக்க அதில் முட்டை வழங்கும் திட்டத்தைத் தந்தவர் நம் கலைஞர் என்று சொன்னால், உலகில் எந்த தலைவரும் சிந்திக்காத காலை உணவுத் திட்டத்தைத் தந்து பள்ளிகளில் இடை நிற்றலை குறைத்தவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

இந்தியாவில் முதன் முறையாக அரசுப் போக்குவரத்துக் கழகத்தை உருவாக்கி மாணவ, மாணவிகளுக்கு இலவச பஸ்பாஸ் தந்து அவர்களின் கல்வி உயர களம் அமைத்துத் தந்தவர் நம் கலைஞர் எனில், அனைத்து மகளிருக்கும் கட்டணமில்லா பேருந்துப் பயணத்தை தந்து மகளிர் வாழ்வில் மாபெரும் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் மூலம் கிராமப்புற பெண்கள் பத்தாம் வகுப்பு வரை யாவது படித்துவிட வேண்டும் என்று நினைத்தவர் நம் கலைஞர் எனில், புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் பெண்களின் உயர்கல்வி மேம்பட மாதம் ஆயிரம் ரூபாய் தந்தவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு கல்விக் கட்டணத்தில் விலக்கு உள்ளிட்ட சலுகைகளின் மூலம் விளிம்பு நிலை மாணவர்களின் கல்விக் கனவை நனவாக்கியவர் நம் கலைஞர் எனில், தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கும் ஆயிரம் ரூபாய் கல்வி உதவித் தொகை வழங்கி அவர்களின் வாழ்வு மேம்படவழி வகுத்தவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

டைடல் பார்க் மூலம் தலைநகர் சென்னையை மென் பொருள் நிறுவனங்களின் புகலிடமாக மாற்றிய பெருமை நம் கலைஞருக்கு உண்டு எனில், மாவட்டந் தோறும் நியோ டைடல் பார்க் அமைத்து தமிழ்நாடு முழுவதையும் மென்பொருள் நிறுவனங்களின் தாயகமாக மாற்றிக் காட்டியவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

பெரியார், அம்பேத்கரின் கனவை நனவாக்கும் விதமாக இந்தியாவிலேயே முதன் முறையாக பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை என்று சட்டமியற்றிய சாதனையாளர் நம் கலைஞர் எனில், மகளிர் உரிமைத் தொகை மற்றும் மகளிர் பெயரில் பத்திரப் பதிவு செய்தால் பதிவுக் கட்டணத்தில் 1 விழுக்காடு விலக்கு ஆகியவற்றின் மூலம் மகளிரின் பொருளாதார சுதந்திரத்தில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

காவல்துறையில் பெண்களும் பணியில் சேரலாம் என்ற சட்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலில் கொண்டு வந்த மகத்தான சாதனையாளர் நம் கலைஞர் எனில், மகளிர் காவல்துறையினர் நீண்ட நேரம் சாலைகளில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவதில் உள்ள சிரமத்தைக் களைந்தவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

இசுலாமியர்களுக்கு 3.5 விழுக்காடு உள் இட ஒதுக்கீடு தந்து சிறுபான்மை மக்களின் வாழ்வு சிறக்கச் செய்தவர் நம் கலைஞர் எனில், நீண்ட நாள் இசுலாமிய சிறைவாசிகளை விடுதலை செய்ததோடு, வக்பு சட்ட மசோதாவிற்கு எதிரான சட்டப்பேரவைத் தீர்மானம், உச்ச நீதிமன்ற வழக்கு உள்ளிட்டவற்றின் மூலம் சிறுபான்மை மக்களின் காவலன் என்றுமே தி.மு.க. தான் என்பதை உரக்கச் சொல்லியுள்ளார் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் என்ற பெரியாரின் கனவை நனவாக்க வித்திட்டவர் நம் கலைஞர் எனில், அதை விருட்சமாக்கிய தோடு பெண்களையும் ஓதுவார் ஆக்கி ஆன்மீகத்தில் அனைவரும் சமம் என்று சமூக நீதி காத்தவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

கிராமக் கோவில் பூசாரிகள் நலவாரியம் தந்து ஓடாத திருவாரூர் தேரை ஓட வைத்தவர் கலைஞர் எனில், 2000 கோவிலுக்கு குட முழுக்கு நடத்தி பழனியில் முருகன் மாநாட்டையும் நடத்திக் காட்டியவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

நளினியின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்தவர் நம் கலைஞர் எனில், பேரறிவாளன் உள்ளிட்ட எழுவர் விடுதலையை சாத்தியப்படுத்திக் காட்டியவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

ஈழத் தமிழர்களுக்கு இட ஒதுக்கீடு தந்து அவர்கள் வாழ்வில் புதிய வெளிச்சம் தந்தவர் நம் கலைஞர் எனில், இலங்கை அகதிகள் முகாமை, இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என்று மாற்றி அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர பல்வேறு திட்டங்களைத் தந்து கொண்டிருப்பவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.



தமிழ்க் கேள்வி
**தி.செந்தில்வேல்**
(மூத்த ஊடகவியலாளர்)

மாற்றுத் திறனாளி, திருநங்கை உள்ளிட்ட பெயர்களைத் தந்ததோடு அவர்களுக்கான நலவாரியத்தைத் தந்தவர் நம் கலைஞர் எனில், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் மாற்றுத் திறனாளிகள் போட்டியின்றி பதவிகளுக்கு நியமனம் செய்யப்படுவர் என்றும், திருநங்கைகளின் உயர்கல்விக்கு கட்டணம் ஏதும் இல்லை என்றும் அறிவித்து திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் மாற்றம் மலர திட்டம் தந்தவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

சென்னையில் மெட்ரோ ரயில் சேவைத் திட்டத்தை தந்து தலைநகரின் தலையெழுத்தையே மாற்றிக் காட்டியவர் நம் கலைஞர் எனில், தலை நகர் தாண்டி தமிழகத்தின் இன்னபிற நகரங்களுக்கும் மெட்ரோ திட்டத்தை விரிவுப்படுத்தி தமிழ்நாட்டின் வளர்ச்சியை விசாலமாக்கியவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

ஆசியாவிலேயே மிகப்பெரிய பேருந்து நிலையமாக கோயம்பேடு பேருந்து நிலையத்தை நமக்குத் தந்தவர் கலைஞர் எனில், அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டிருந்தாலும் பணிகள் நிறைவுறாமல் இருந்த கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை உலகத் தரத்தில் விமான நிலையங்களுக்குப் போட்டியாக கட்டி முடித்து பயன்பாட்டிற்குத் தந்தவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

கலைஞர் காப்பீட்டுத் திட்டம் தந்து ஏழை எளிய மக்களும் தரமான மருத்துவ சிகிச்சை பெற வழிகாட்டியவர் நம் கலைஞர் எனில், நம்மைக் காக்கும் 48 என்ற திட்டத்தின் மூலம் விபத்தில் அடிபட்டவர்கள் அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் முதற்கட்ட செலவை அரசே ஏற்கும் என்ற மகத்தான திட்டத்தைத் தந்தவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

கைத்தறி நெசவாளர்களுக்கு முதியோர் உதவித் தொகைத் திட்டம் தந்தவர் நம் கலைஞர் எனில், விசைத்தறித் தொழிலாளர்களுக்கு ஆயிரம் யூனிட் இலவச மின்சாரம், கைத்தறிக்கு 300 யூனிட் இலவச மின்சாரம் என்ற திட்டங்களை தந்தவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

42 அணைக்கட்டுகள் கட்டி தமிழ்நாட்டின் பாசனப் பரப்பை உயர்த்திய பெருமை நம் கலைஞருக்கே சேரும் எனில், சென்னையில் 310 ஏக்கர் பரப்பில் 1.6 டி.எம்.சி. வெள்ள நீரைச் சேமிக்கும் வகையில், 360 கோடியில் புதிய நீர்த்தேக்கம் திட்டத்திற்கு வித்திட்டவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

மாநிலங்களின் முதலமைச்சர்களே சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியேற்றலாம் என்ற உரிமையை எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் பெற்றுத் தந்தவர் நம் கலைஞர் எனில், முதலமைச்சரே துணை வேந்தரை நியமிக்கலாம் என்றும், மாநில அரசின் மசோதாக்கள் மீது ஆளுநர் குறித்த காலக்கெடுவிற்குள் முடிவெடுக்க வேண்டும் என்றும் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பைப் பெற்றுத் தந்தவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

வள்ளுவனுக்கு வானுயர சிலையும், வள்ளுவர் கோட்டமும் தந்தவர் நம் கலைஞர் எனில், வள்ளுவன் சிலைக்கு உலகத் தரத்தில் கண்ணாடிப் பாலம் அமைத்துத் தந்தவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

தமிழுக்கு செம்மொழி அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தவர் நம் கலைஞர் எனில், கீழடியில் அருங்காட்சியகம், பொருநை நதிக்கரையில் அருங்காட்சியகம், இரும்பின் காலம் தமிழ்நாட்டில் இருந்தே தொடங்கியது என்பதை நிறுவியது, மதுரை சல்லிக்கட்டு மைதானம் ஆகியவற்றைத் தந்து தமிழர்களின் கலாச்சார, பண்பாட்டு பெருமையை உலகிற்கு ஓங்கிச் சொன்னவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

அம்பேத்கர் பெயரில் சட்டக்கல்லூரி, பல்கலைக்கழகம், அம்பேத்கர் மணி மண்டபம் அமைத்துத் தந்தவர் நம் கலைஞர் எனில், அம்பேத்கர் பிறந்த நாளை சமத்துவ நாளாக அறிவித்து, உறுதிமொழி ஏற்கச் செய்தவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

மண்டல் கமிசன் பரிந்துரைகளை அமல்படுத்த வி.பி.சிங்கிற்கு தோளோடு தோள் நின்றவர் நம் கலைஞர் எனில், சென்னையில் அந்த வி.பி.சிங்கிற்கு அழகானதொரு சிலையை நிறுவியவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

தூத்துக்குடி துறைமுகத்திற்கு செக்கிழுத்த செம்மல் வ.உ.சி.யின் பெயரைச் சூட்ட காரணமாக இருந்தவர் நம் கலைஞர் எனில், கோவையில் வ.உ.சி.க்கு சிலை, தூத்துக்குடி பிரதான சாலைக்கு வ.உ.சி.பெயர், வ.உ.சி.யின் நினைவு நாள் தியாகத் திருநாள் என்று அறிவித்தவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

சென்னை விமான நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயரைச் சூட்டி அழகு பார்த்தவர் நம் கலைஞர் எனில், திருச்சியில் அமையும் நூலகத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயரைச் சூட்டி அகமகிழ்பவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

தலைநகர் சென்னையில் பிரமாண்டமான அண்ணா நூலகத்தைத் தந்து அறிவுச் சுடர் ஏற்றியவர் நம் கலைஞர் எனில், மதுரையில் கலைஞர் நூலகம் தந்து, மாவட்டந்தோறும் உலகத் தரத்தில் நூலகங்களை கட்டி எழுப்பிக் கொண்டிருப்பவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் தந்தவர் நம் கலைஞர் எனில், பெரியார் பிறந்த நாளை சமூக நீதி நாளாக அறிவித்தவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

இப்படி அடுக்கிக் கொண்டே செல்லலாம்..

தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்தின் வளர்ச்சியிலும் தி.மு.க.வின் திட்டங்கள் நீச்சயம் இடம்பெற்றிருக்கும். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழகம் தொட்ட வளர்ச்சியை வேறு எந்த மாநிலமும் எந்த ஆட்சிக் காலத்திலும் தொட்டதேயில்லை என்பதே வரலாறு.

ஆயினும் ஒரு கூட்டம் தி.மு.க.வை வீழ்த்த தொடர்ந்து சதிகளைத் தீட்டிக் கொண்டேயிருக்கிறது. அதற்கு ஒற்றைக் காரணம் தி.மு.க.தொடர்ந்து முன்னெடுக்கும் சமூக நீதித் திட்டங்களே. சமூக நீதிக்கு எதிரான ஆரிய சக்திகள் தி.மு.க.வின் வாக்குகளை சிதறடிக்க பல்வேறு வேடங்களில் பலரையும் களமிறக்கியுள்ளன.

யார் எத்தனை வேடமிட்டு வந்தாலும் தமிழ்நாட்டு மக்களை இனி எவராலும் ஏமாற்ற முடியாது என்பதை உரக்கச் சொலியுள்ளன கடந்த தேர்தல்கள். ஆம் அந்த வரிசையில் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் "வெல்வோம் 200 படைப்போம் வரலாறு" என்ற நம் முதலமைச்சரின் எண்ணம் ஈடேற நாம் ஒவ்வொருவரும் கழக சாதனைகளை "இல்லம் தோறும் எடுத்துச் சொல்வோம். உள்ளம் தோறும் உரக்கச் சொல்வோம்" தமிழ்நாட்டின் வழிகாட்டி இந்தியாவின் திசைகாட்டி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில் வெல்வோம் 200 படைப்போம் வரலாறு. தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும்!

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆலோசனை வழங்குகிறார்!

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட 4 அணிகள் ஆலோசனைக் கூட்டம்!

### அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ் – எல்.பிரபு– ரவிச்சந்திரன் – உதயா கருணாகரன் அறிக்கை!

சென்னை, ஏப்.16

காஞ்சிபுரம்த வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் எல். பிரபு, தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரவிச்சந்திரன், மகளிரணி அமைப்பாளர் உதயா கருணாகரன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, மகளிர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (16.4.2025 புதன்கிழமை) மாலை 4 மணிக்கு மாவட்ட அலுவலகம் கத்திப்பாரா வில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் அமைச்சர் தா. மோ. அன்பரசன் ஆலோசனை வழங்குகிறார்.

எனவே கூட்டத்திற்கு மாவட்ட துணை அமைப்பாளர்கள் மாநகர அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஒன்றிய நகர பகுதி பேரூர் இளைஞர் அணி மாணவர் அணி தகவல் தொழில்நுட்ப அணி மகளிர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் எல். பிரபு, தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ரவிச்சந்திரன், மகளிரணி அமைப்பாளர் உதயா கருணாகரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.



திருப்போரூர் வடக்கு ஒன்றியச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி, ஒன்றியக் கழகச் செயலாளர் எல்.இதயவர்மன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஜி.சி.அன்புசெழியன், வீ.விஜயகுமார், ஆர்.கோவிந்து, எஸ்.ஏகாம்பரம், ஏ.ரமேஷ், எஸ்.ராமகிருஷ்ணன், ஏ.கருணகரன், டி.வெங்கடேசன், ஆர்.நிஷாந்த், பர்வீன்நிஷா, செ.எல்லப்பன், க.கௌரிசங்கர், மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## திருத்துறைப்பூண்டி நகரக் கழக முன்னாள் செயலாளர்

# வழக்கறிஞர் ஜி.தர்மராஜன் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர், ஏப்.16-

திருத்துறைப்பூண்டி நகரக் கழகத்தைச் சேர்ந்த கழக செயல் வீரர் வழக்கறிஞர் ஜி.தர்மராஜன் (வயது 70) அவர்கள் உடல்நல குறைவால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மறைந்த ஜி.தர்மராஜன் அவர்கள் சட்டக் கல்லூரியில் பயின்ற போது கழக மாணவர் அமைப்பின் பொறுப்பாளராக இருந்து கழகப் பணி ஆற்றியவர்.

திருத்துறைப்பூண்டி நகரக் கழகத்தினுடைய முன்னாள் செயலாளராக இருந்து திறம்பட பணியாற்றியவர்.

மேலும் திருத்துறைப் பூண்டி வழக்கறிஞர் சங்கத்தின் தலைவராகவும், திருவாரூர் மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் அமைப்பாளராகவும், அரசு கூடுதல் வழக்கறிஞராக பணியாற்றி வருபவர்.

மறைந்த ஜி.தர்மராஜன் அவர்களுக்கு கலைச் செல்வி என்கிற மனைவியும் கார்த்திக் ராஜன் என்கிற மகனும் ராஜலட்சுமி என்கிற மகளும் உள்ளனர்.

மறைந்த ஜி.தர்மராஜன் அவர்களின் இறுதி ஊர்வலம் 17.04.2025 வியாழன் அன்று காலை 11.00 மணியளவில் திருத்துறைப் பூண்டி ஆட்டூர் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்படுகிறது.



மாவட்ட துணை அமைப்பாளர் அமைப்புசாரா அணி அ.தங்கசெல்வம் அ. பன்னீர்செல்வம் தாயார் பதினாறாம் நாள் நினைவு அஞ்சலி நிகழ்ச்சியில் அன்னாரின் திருவுருவச்சிலையை அமைச்சர் பி.கே,சேகர்பாபு திறந்து வைத்தார். உடன் பகுதிச்செயலாளர் வி.சுதாகர், இ.மொய்தீன், மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், பரிதி இளம் ஸ்ருதி எம்.சி., சுந்தர்ராஜன் எம்.சி., கிருஷ்ணமூர்த்தி விஜயகுமார், எஸ்.ரசூல், ஜெகதீசன், கருணாகரன், வி.விஜயகுமார், ஆர். கோபி,வெற்றி வீரன், ஜெயக்குமார், எம்.கே ரவிவர்மன், ஷர்மிளா, செல்வராஜ், ஸகுர் (எ) ரஹிபுல்லா, ஜெயக்குமார், தனசேகர் (எ) பாபு, கிருஷ்ணன்,குறளரசன், சிடி சுரேஷ், குமார், காண்டீபன், அனில் ரங்கா, வே.குமரன், சேக் ஃபரீத், ஜெ. மொகிந்தர் அமர்நாத் தொகுதி ஒருங்கிணைப்பாளர் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், கலந்து கொண்டு சிறப்பித்தனர்.